**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions

} CC.No. 389/2017

Deposition Of Witness for } Prosecution PW 4 / Defense / Court

Name ராமசந்திரன்

Husband Name / Father's Name

Village

Taluk

Religion Muslim/Christian/Hindu

Age /2021

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of March 2021.

நான் மூன்றடைப்பில் வசித்து வருகிறேன். விவசாயம் பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன ஆறுமுகத்தை தெரியும் ஊர்காரர். தேதி மாதம் ஞாபகமில்லை சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக காலை 5.00 மணிக்கு மேல் நாகர்கோவில் செல்லும் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக சென்றார் அப்போது வண்டியின் வெளிச்சம் வருவதை பார்த்து ரோட்டை கடப்பதற்காக நிற்கும்போது தெற்கிலிருந்து வந்த பஜாஜ் வண்டி ராஜபாண்டி என்பவர் வண்டியை ஆறுமுகத்தின் மீது மோதியது சம்பவத்தை பார்த்த நானும் சிங்காரவேலனும் மற்றும் அருகில் இருந்த நபர்களும் ஆறுமுகத்தை தூக்கி பார்த்தோம். வலது தலை மற்றும் கால் பகுதியில் காயம் இருந்தது. அவருடைய மகன் நயினார் சம்பவத்தை பார்த்து ஓடி வந்தார் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து ஐகிரவுண்ட் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் மருத்துவமனை சென்று 7.00 மணியளவில் அவர் இறந்துவிட்டார். காவல்துறையினர் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்யவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த இடத்திலிருந்து 100 அடி தள்ளி வடக்கு பக்கம் அணுகு சாலை ஆரம்பிக்கிறது என்றால் சரிதான். அணுகுசாலை ஆரம்பாகும் இடத்தில் தான் நான்குவழிசாலையை கடந்து செல்ல வழி உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தெருவிளக்கு எதுவும் கிடையாது என்றால் சரிதான். அதிகாலை நேரம் என்பதால் அருகில் இருந்த கடைகள் எதுவும் திறக்கவில்லை என்றால் அங்கு கடைகள் கிடையாது. இறந்துபோன அம்மாவிற்கு 65 வயது இருக்கும் என்றால் சரிதான். வயதான காரணத்தினால் தான் ரோட்டை கவனிக்காமல் கடக்க முயன்றார் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் பைக்கின் உடைந்த

பாகங்கள் இருந்ததா என்றால் நான் பார்க்கவில்லை. சம்பவம் நடந்த உடன் மருத்துவமனை சென்றுவிட்டீற்கள் என்றால் சரிதான். இறந்து போன நபரின் மகன் எப்போது சம்பவம் இடத்திற்கு வந்தார் என்றால் கால்மணி நேரத்தில் வந்தார். அவர் மகனுக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் தெரியாது. போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் தெரியாது. சம்பவம் நடந்து எவ்வளவு நேரத்தில் ஆம்புலன்ஸ் வந்தது என்றால் அரை மணி நேரத்தில் வந்தது. சம்பவம் நடக்கும் நேரத்தில் சம்பவ இடத்தில் இருந்து நீங்கள் எவ்வளவு தூரத்தல் வந்தீற்கள் என்றால் நான் சம்பவ இடத்தில் இருந்து 20 அடி தூரத்தில் இருந்தேன் மேற்கு திசையில் இருந்து வந்து கொண்டிருந்தேன். பைக் ஓட்டிய நபர் பெயரை உங்களுக்கு யார் சொன்னார் என்றால் பேசி கொண்டிருந்தார்கள் யார் சொன்னார் என்று தெரியாது. இறந்துபோன நபர் சாலையை நின்று கொண்டிருக்கும்போது தான் விபத்து நடந்ததாக போலிசார் விசாரணையில் சொன்னீற்களா என்றால் போலிசார் என்னை விசாரிக்கவில்லை அதனால் சொல்லவில்லை. ஆம்புலன்ஸில் நீங்கள் செல்லும் போது யார் எல்லாம் சென்றார்கள் என்றால் நான் ஆம்புலன்ஸில் செல்லவில்லை பின்னால் இருசக்கர வாகனத்தில் சென்றேன் அதனால் தெரியாது. இறந்து போன ஆறுமுகம் உங்கள் உறவினர் என்றால் சரிதான். வழக்கில் இறந்து போன நபர் உங்கள் உறவினர் என்பதால் சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சி சொல்கிறீர்கள், இறந்தது போன நபர் வயது முதிர்வின் காரணமாக கண்பார்வை சரியாக தெரியாததால் தெற்கிலிருந்து வாகனம் வருவதை கவனிக்காமல் கவனகுறைவாக தேசிய நெடுஞ்சாலையை கடந்ததால் இந்த விபத்து நடந்தது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 389/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | முத்துபட்டன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of March 2021.

நான் வாகைகுள்த்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன ஆறுமுகத்தை தெரியும் பக்கத்து ஊர்காரர். 11.06.2016 - ம் தேதி காலை 5.30 மணியளவில் மூன்றடைப்பு மூக்காண்டி வீட்டிற்கு கீழ்புறம் அவருடைய மகன் வீட்டிற்கு பால் கறப்பதற்காக சென்றார். அப்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த பஜாஜ் டிஸ்கவர் TN 72 AT 1956 என்ற வண்டியை ராஜபுதூரை சார்ந்த ராஜபாண்டி என்பவர் ஓட்டி வந்தார் எதிரி ஆஜர் இல்லை. ராஜபாண்டி ஓட்டி வரும் போது ஆறுமுகம் ரோட்டை கடக்கும் போது விபத்து நடந்தது. விபத்து நடந்ததாக கேள்விபட்டேன். சிகிச்சை பலனின்றி ஆறுமுகம் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். காவல்துறையினர் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவத்தை நீங்கள் நேரடியாக பார்க்வில்லை என்றால் சரிதான். உங்களுக்கு யார் சம்பவம் பற்றி தகவல் சொன்னார் என்றால் டீ கடையில் பேசி கொண்டிருந்தார்கள் அதனால் தெரியும். இறந்து போன நபர் உங்கள் உறவினரா என்றால் தூரத்து சொந்தம். இறந்து போன நபர் தூரத்து சொந்தம் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**